# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வெள்ளிக்கிழமை நாள் 25.10.2024 காலை 10.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி காமராஜ் மன்றம் ஏ.எஸ்.ஜி. லூர்துசாமி கூட்ட மண்டபத்தில் பின்வரும் பொருள்களைப் பற்றி சாதாரணக் கூட்டம் நடைபெறும்.**

## நிகழ்ச்சி நிரல்

**பொருள்: 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பஞ்சப்பூரில் ரூ.349.98 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம், பல்வகை பயன்பாட்டு வசதிகள் மையம், கனரக சரக்கு வாகன முனையம் மற்றும் இதர உட்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு 21.10.2022ம் தேதியன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதில் , 93 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளது. மீதமுள்ள பணிகள் விரைந்து நடைபெற்று வருகிறது . இத்திட்டப்பணிகள் விரைவில் திறப்பு விழா காணவுள்ளது.

ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திற்கு **"முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையம் "** மற்றும் கனரக சரக்கு வாகன முனையத்திற்கு **"பேரறிஞர் அண்ணா கனரக சரக்கு வாகன முனையம் "** என பெயர் சூட்டுவதற்கு அரசின் அனுமதி பெற கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வரப்பெற்ற நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களது 03.10.2024ம் தேதிய கடிதம் ந .க.எண்.28106/2024/டிபி1–ல், மேற்கண்டவாறு பெயர் சூட்டுவது குறித்த தீர்மானத்தை திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்றத்தின் முன் வைக்க அரசின் அனுமதி 27.09.2024ம் தேதிய அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் கடித எண் .7067/மாந.5/2023/1 வாயிலாக வழங்கப்பட்டுள்ளது எனவும், தீர்மானம் நிறைவேற்றிய பிறகு உரிய கருத்துருவினை நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்கள் வழியாக அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திற்கு **"முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் மு .கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையம் "** மற்றும் கனரக சரக்கு வாகன முனையத்திற்கு **"பேரறிஞர் அண்ணா கனரக சரக்கு வாகன முனையம் "** என பெயர் சூட்டுவதற்கும் மற்றும் அரசுக்கு கருத்துரு அனுப்பி வைப்பதற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திற்கு **"முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையம் "** மற்றும் கனரக சரக்கு வாகன முனையத்திற்கு **"பேரறிஞர் அண்ணா கனரக சரக்கு வாகன முனையம் "** என பெயர் சூட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கலாம்.
2) இப்பொருள் தொடர்பான கருத்துருவினை அரசுக்கு அனுப்பி வைப்பதற்கு ம் அனுமதி அளிக்கலாம்.

**இ1(மை)/4343/2021**

**தீர்மானம் எண்:681 பொருள் :1 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 2**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம், வார்டு குழு அலுவலகம் 4 (பொன்மலைக் கோட்டம்), தேர்தல் வார்டு 56 புதிய வார்டு AL, பிளாக் எண் 13, நகரளவு எண் 59ல் கட்டுப்பட்ட ஹெக் 1.1400.0 ச.மீ. பரப்புள்ள இடத்தில், கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக, வீடுகட்டிக் குடியிருந்து வரும், 100க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (மேற்கு) வட்டம்** அவர்களின் கடிதம் ந.க.எண் ஆ3/2448/2024, நாள் 12.10.2024ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி இடம், **கருமண்டபம் – தெற்குத் தெருவில்** அமைந்துள்ளது. உத்தேச இடம், நகரளவைக் கணக்குகளில், **"சர்க்கார் புறம்போக்கு – மயானம்"** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி இடத்தில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மைச் சான்று வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம்போக்கு – மயானம்"** எனக் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

**(எப்1/8313/2024/மையம்)**

**தீர்மானம் எண்:682 பொருள் : 2 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம், வார்டு குழு அலுவலகம் 5 (கோ.அபிஷேகபுரம் கோட்டம்), தேர்தல் வார்டு எண் 22, புதிய வார்டு M, பிளாக் எண் 40, நகரளவு எண் 118ல் கட்டுப்பட்ட 0.0935.0 ஹெக்டேர் இடத்தினில், கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகட்டிக் குடியிருந்து வரும் திருமதி.சாரதா / க.பெ மகாமணி என்பவருக்கு பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (மேற்கு) வட்டம்** அவர்களின் கடிதம் ந.க.எண் ஆ3/2448/2024, நாள் 12.10.2024ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி இடம், **தில்லைநகர் – வாமடத்தில்** அமைந்துள்ளது. உத்தேச இடம், நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம்போக்கு – கக்கூஸ்"** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், குடியிருந்து வரும் குடியிருப்புதாரரின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மைச் சான்று வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நகரளவைக் கணக்குகளில், **"சர்க்கார் புறம்போக்கு – கக்கூஸ்"** எனக் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இடத்தில் வீடுகட்டிக் குடியிருந்து வரும் திருமதி.சாரதா / க.பெ மகாமணி என்பவருக்கு பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

**(எப்1/8308/2024/மையம்)**

**தீர்மானம் எண்:683 பொருள் : 3 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம், வார்டு குழு அலுவலகம் 5 (கோ.அபிஷேகபுரம் கோட்டம்), தேர்தல் வார்டு எண் 26, புத்தூர் கிராமம், புதிய வார்டு Y, பிளாக் எண் 3, நகரளவு எண் 1ல் கட்டுப்பட்ட ஹெக் 0.7584.0 ச.மீ., நகரளவு எண் 7ல் கட்டுப்பட்ட ஹெக் 0.1725.0 ச.மீ. பரப்புள்ள இடங்களில், கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக, வீடுகட்டிக் குடியிருந்து வரும், 100க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (மேற்கு) வட்டம்** அவர்களின் கடிதம் ந.க.எண் ஆ3/2448/2024, நாள் 12.10.2024ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி இடம், **MGR நகரில்** அமைந்துள்ளது. உத்தேச இடம், நகரளவைக் கணக்குகளில், **"சர்க்கார் மனை – முனிசிபல் ரோடு (நகரளவு எண் 1), சர்க்கார் மனை – ரோடு (நகரளவு எண் 7)"** எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனவே, மேற்படி இடங்களில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடங்களில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மைச் சான்று வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நகரளவைக் கணக்குகளில், **"சர்க்கார் மனை – முனிசிபல் ரோடு (நகரளவு எண் 1), சர்க்கார் மனை – ரோடு (நகரளவு எண் 7)"** எனக் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இடங்களில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

**(எப்1/8310/2024/மையம்)**

**தீர்மானம் எண்:684 பொருள் : 4 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 5

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம், வார்டு குழு அலுவலகம் 4 (பொன்மலை கோட்டம்), தேர்தல் வார்டு எண் 52, வார்டு X, பிளாக் எண் 7, நகரளவு எண் 69ல் கட்டுப்பட்ட ஹெக் 0.0636.0 ச.மீ., நகரளவு எண் 97ல் கட்டுப்பட்ட ஹெக் 0.0422.0 ச.மீ. பரப்புள்ள இடங்களில், கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக, வீடுகட்டிக் குடியிருந்து வரும், 20க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (மேற்கு) வட்டம்** அவர்களின் கடிதம் ந.க.எண் ஆ3/2448/2024, நாள் 12.10.2024ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி இடம், **அந்தோணியார் கோவில் தெருவில்** அமைந்துள்ளது. உத்தேச இடம், நகரளவைக் கணக்குகளில், **"சர்க்கார் மனை – அந்தோணியார் கோவில் தெரு (நகரளவு எண் 69), சர்க்கார் மனை – அந்தோணியார் கோவில் தெரு – பூஸ்திதி சந்து (நகரளவு எண் 97)"** எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனவே, மேற்படி இடங்களில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடங்களில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மைச் சான்று வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நகரளவைக் கணக்குகளில், **"சர்க்கார் மனை – அந்தோணியார் கோவில் தெரு (நகரளவு எண் 69), சர்க்கார் மனை – அந்தோணியார் கோவில் தெரு – பூஸ்திதி சந்து (நகரளவு எண் 97)"** எனக் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இடங்களில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

**(எப்1/8311/2024/மையம்)**

**தீர்மானம் எண்:685 பொருள் : 5 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 6

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம், வார்டு குழு அலுவலகம் 4 (பொன்மலைக் கோட்டம்), தேர்தல் வார்டு எண் 54, புதிய வார்டு AB, பிளாக் எண் 6, நகரளவு எண் 32ல் கட்டுப்பட்ட **ஹெக் 0.0197.0 ச.மீ.** பரப்புள்ள இடத்தில், கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக, வீடுகட்டிக் குடியிருந்துவரும் குடும்பங்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (மேற்கு) வட்டம்** அவர்களின் கடிதம் ந.க.எண் ஆ3/2448/2024, நாள் 12.10.2024ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி இடம், **பர்மா காலனியில்** அமைந்துள்ளது. உத்தேச இடம், நகரளவைக் கணக்குகளில், **"சர்க்கார் புறம்போக்கு – பாதை"** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி இடத்தில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மைச் சான்று வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு :**</u> நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம்போக்கு – பாதை"** எனக் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

**(எப்1/8315/2024/மையம்)**

**தீர்மானம் எண்:686 பொருள் : 6 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 7

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம், வார்டு குழு அலுவலகம் 5 தேர்தல் வார்டு எண். 11 (கோ.அபிஷேகபுரம் கோட்டம்), தாமலவாரூபயம் கிராமம், புதிய வார்டு G, பிளாக் எண் 12, நகரளவு எண் 79ல் கட்டுப்பட்ட **ஹெக் 0.2340.0 ச.மீ.** பரப்புள்ள இடத்தில், கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக, வீடுகட்டிக் குடியிருந்து வரும், 10க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (மேற்கு) வட்டம்** அவர்களின் கடிதம் ந.க.எண் ஆ3/2448/2024, நாள் 12.10.2024ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி இடம், **உறையூர் – கீரைக்கொல்லைத் தெருவில்** அமைந்துள்ளது. உத்தேச இடம், நகரளவைக் கணக்குகளில், **"சர்க்கார் புறம்போக்கு – முனிசிபல் ரோடு"** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி இடத்தில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மைச் சான்று வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு :**</u> நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம்போக்கு – முனிசிபல் ரோடு"** எனக் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

**(எப்1/8312/2024/மையம்)**

**தீர்மானம் எண்:687 பொருள் : 7 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 8

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம், வார்டு குழு அலுவலகம் 4 (பொன்மலைக் கோட்டம்), தேர்தல் வார்டு எண் 52, வார்டு X, பிளாக் எண் 28, நகரளவு எண் 87ல் கட்டுப்பட்ட **ஹெக் 0.1728.0 ச.மீ.** பரப்புள்ள இடத்தில், கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக, வீடுகட்டிக் குடியிருந்துவரும் குடும்பங்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (மேற்கு) வட்டம்** அவர்களின் கடிதம் ந.க.எண் ஆ3/2448/2024, நாள் 12.10.2024ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி இடம், **சவேரியார் கோவில் தெருவில்** அமைந்துள்ளது. உத்தேச இடம், நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம்போக்கு – தெரு"** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி இடத்தில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மைச் சான்று வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு :**</u> நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம்போக்கு – தெரு"** எனக் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இடங்களில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

**(எப்1/8314/2024/மையம்)**

**தீர்மானம் எண்:688 பொருள் : 8 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 9**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்-4, வார்டு எண்.52க்குட்பட்ட மார்சிங்பேட்டை பிரதான சாலையானது மாநகரின் முக்கிய சாலையாகவும், முக்கிய பிரமுகர்கள் பயணிக்கும் சாலையாகவும் பள்ளிகள் உள்ள சாலையாக உள்ளதால், பள்ளி குழந்தைகள் நடந்து செல்ல வழிவகை செய்ய வேண்டியுள்ளது.

மேலும் மழைநீர் வடிகால், நடைமேடை, சிறுபாலம் ஆகியவை மிகவும் சேதமடைந்துள்ளதால், மார்சிங்பேட்டை பிரதான சாலையில் மழைநீர் வடிகாலுடன் கூடிய நடைமேடை அமைப்பதற்கு கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, நிர்வாக அனுமதி கோரி மாமன்ற பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.52க்குட்பட்ட மார்சிங்பேட்டை மெயின் ரோடு பகுதியில் மழைநீர் வடிகாலுடன் கூடிய நடைமேடை (Reach I) அமைத்து கொடுக்கும் பணி<br>**இ4/7222/2024/மையம்** | 59.40 |

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவின தொகையினை **2024-25ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் (4103101) மழைநீர் வடிகால் புதிதாக கட்டுதல் / மேம்படுத்துதல் மற்றும் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல்** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.3250.00 இலட்சத்தில் இருந்து செலவு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**இ4/ 7222 /2024/மையம்**

**தீர்மானம் எண்:689 பொருள் : 9 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 10**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் எண்.01, வார்டு எண்.04க்குட்பட்ட அம்பேத்கார் நகரில் நவீன எரிவாயு தகன மேடை (Gasifier Crematorium) இயங்கி வருகிறது. இங்கு தினசரி 2 முதல் 5 வரையிலான சடலங்கள் எரியூட்டபட்டு இறுதி சடங்குகள் செய்யப்பட்டு வருகிறது. இத்தகன மேடையில் உள்ள எரியூட்டும் இயந்திரத்தின் கதவு, Scrubber, Blower மற்றும் Furnace ஆகிய பாகங்கள் பழுது ஏற்பட்டு புகை மற்றும் வெப்பம் அதிகமாகி கட்டிடத்தின் சுவர்கள், மின் இணைப்புகள் பழுது ஏற்படுகிறது. இதனால் எரியூட்டுவதற்கு ஏற்றவாறு இல்லாததால், மையத்தின் வெளியில் கட்டிடம் கட்டி மாற்றி அமைக்கவும் மராமத்து பணிகளை மேற்கொள்வது மிகவும் அவசியமாகிறது.

எனவே, மேற்படி மையத்தின் வெளியில் கட்டிடம் கட்டவும், பழுதடைந்துள்ள எரியூட்டும் இயந்திரத்தின் கதவு, Scrubber, Blower மற்றும் Furnace ஆகிய பாகங்களை மராமத்து செய்யும் பணியினை மேற்கொள்ள **ரூ.31.20** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மதிப்பீட்டுத் தொகை **ரூ.31.20** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2023-24ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் எரிவாயு தகன மேடை அபிவிருத்தி என்ற தலைப்பி ன் கீழ் **(4102001-7)** இப்பணியினை செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ2/7592/2024(மையம்)**

**தீர்மானம் எண்:690 பொருள் : 10 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 11

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் கீழ்கண்டுள்ள பணியினை பொதுநிதி 2024–25ன் கீழ் மேற்கொள்ள, ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி 03.09.2024–ம் தேதியன்று பெற்று, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை (RFP) எண்.119/2024–25ன் வாயிலாக 24.09.2024 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் (திருவாளர்கள்) | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| | பொதுநிதி 2024–25 | | |
| 1. | முனிசிபல் பத்திரங்க ளை வழங்கும் நடைமுறைகளை மேற்கொள்வதற்கும், மாநகராட்சி கடன் பெறும் தகுதியை மதிப் பீடு செய்வதற்கும் மற்றும் தொடர்புடைய இதர பணிகளை மேற்கொள்வதற்கும் Credit Rating Agencies–II கலந்தாலோசகர் நியமனம் செய்யும் பணி. **மதிப்பீடு ரூ.9.50 லட்சம்.** | 1. M/s. India Ratings & Research Pvt. Ltd., Chennai. 1.25 % குறைவு. | **ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றதில், M/s.India Ratings & Research Pvt. Ltd., Chennai நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் 1.25 சதவீதம் குறைவான விலை விகிதத்தில், ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.** |

**அலுவலக குறிப்பு :**

1. மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டிற்கு ஆணையர் அவர்களின் தீர்மானம் நாள்.03.09.2024ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியினை பத்தி எண்.4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஏற்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கப்பட்டமைக்கு ஒப்புதல் அளிக்கலாம்.

**(இ1(மை)/7299/2024)**

**தீர்மானம் எண்:691 பொருள் : 11 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 12

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2024-25ன் கீழ், இப்பணிகளை மேற்கொள்ள பணிக்குழுவின் தீர்மானம் எண். 66 நாள். 29.07.2024ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 134 / 2024-25 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள 01.10.2024 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண் 55 க்குட்பட்ட பிராட்டியூர் கீழ தெரு பகுதியில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் PCC சிமெண்ட் காண்கீரிட் தளம் மழைநீர் வடிகால் மற்றும் RCC சிறுபாலம் அமைக்கும் பணி **மதிப்பீடு ரூ. 10.80 இலட்சம்** | 1.திரு.S. சுரேஷ், திருச்சி 0.05% குறைவு<br>2, M/s. VKJ Construction, திருச்சி 1.03% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. S. சுரேஷ், **திருச்சி** ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. பணிக்குழுவின் தீர்மானம் எண். 66 நாள். 29.07.2024ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 1333 / 2024 ( மையம்)**

**தீர்மானம் எண்:692 பொருள் : 12 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 13

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , வார்டு குழு –IV, வார்டு எண் .57க்குட்பட்ட எடமலைபட்டிபுதூர் ராஜிவ்காந்தி நகரில் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி கட்டும் பணியினை ரூ.990.00 இலட்சம் மதிப்பீட்டில் கல்வி நிதி 2022– 23ன் கீழ் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அ வர்களின் செயல்முறைகள் ந .க.எண்.14150/2022/மாநஅ–2, நாள்.11.04.2023ல், நிர்வாக அனுமதி அளித்து உத்தரவிடப்பட்டது.

மேற்படி பணிக்கான தொழில்நுட்ப அனுமதியில், மதிப்பீட்டுத் தொகை ரூ.990.00 இலட்சத்தில் தளவாடப் பொருட்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு தொகை ரூ.45.00 இலட்சத்திற்கு தனியாக மதிப்பீடு தயார் செய்து, ஒப்பந்தப்புள்ளி கோருமாறு நிபந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பணியினை மேற்கொள்ள, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 83/2024–25ன் வாயிலாக 10.09.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளிக் கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீத விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு குழு–IV, வார்டு எண்.57க்குட்பட்ட ராஜிவ் காந்தி நகரில் புதிதாக கட்டப்பட்டு வரும் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிக்கு தளவாடப் பொருட்கள் வழங்குதல் மற்றும் பொது ஒலிபரப்பி அமைப்பு ஏற்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல். **மதிப்பீடு ரூ.45.00 இலட்சம்.** | 1) M/s. Sri Vinayaka & Co., திருச்சிராப்பள்ளி. **0.05 % குறைவு** 2) M/s. S.P.M Construction, திருச்சிராப்பள்ளி. **0.22 % அதிகம்** | இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளதில், M/s. Sri Vinayaka & Co, திருச்சிராப்பள்ளி நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு** :

அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 4ல் கண்டுள்ள காரணங்களை குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

இ8 / 6449 / 2024 (மையம்)

**தீர்மானம் எண்:693 பொருள் : 13 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 14

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதி 2024–25 ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு, மாமன்ற தீர்மானம் எண் . 518 நாள்.30.08.2024ல் நிர்வாக அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் . 123/2024–25ன் வாயிலாக 10.10.2024 அன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற கீழ்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் விவரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பற்றிய விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | மண்டலம் 3,வார்டு எண்.46க்குட்பட்ட ஜீவா மெயின் ரோட்டில் நேரு தெரு மெயின்ரோடு முதல் திரு.வி.க.தெரு வரை மைய சுடுகலவை இயந்திரம் மூலம் பேவர் பிணிஷர் உதவியுடன் தார் சாலை அமைக்கும் பணி மதிப்பீடு ரூ.54.20 இலட்சம் | 1. மெசர்ஸ்.வேலன் பில்டர்ஸ், திருச்சி 0.08% குறைவு<br>2.திரு. R. வெள்ளைச்சாமி 6.55 % கூடுதல் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மெசர்ஸ்.வேலன் பில்டர்ஸ் , திருச்சி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக்காட்டிலும் 0.08% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்காலம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

<u>**அலுவலகக்குறிப்பு:**</u> –

மேற்கண்ட அட்ட வணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/6347/2024 (மையம்)**

**தீர்மானம் எண்:694 பொருள் : 14 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 15

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , மண்டலம்–4க்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2024–25ன் கீழ் , ஆணையர் அவர்களது நிர்வாக அனுமதி எண் .339, நாள்.13.02.2024ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதனை தொடர்ந்து , கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள மறுஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் .121/2024–25ன் வாயிலாக 27.09.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வ ரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளிக் கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்துள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| **பொது நிதி 2023–24** | | | |
| 1. | வார்டு எண்.54க்குட்பட்ட மிளகுபாறை பகுதியில் பல்நோக்கு அலுவலக பயன்பாட்டுக் கட்டிடம் கட்டி கொடுக்கும் பணி<br>**மதிப்பீடு:ரூ.25.00 இலட்சம்** | 1.திரு.V.திருமலைசாமி, திருச்சி 0.06% குறைவு<br>2. திருமதி. L. தீபஜோதி, திருச்சி 2.09% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.V.திருமலைசாமி, திருச்சி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந் தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்கண்ட பணிக்கு ஆணையர் அவர்களது நிர்வாக அனுமதி எண்.339, நாள்.13.02.2024ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதனை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் . 4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4 /1342/2024/ மையம்**

**தீர்மானம் எண்:695 பொருள் : 15 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 16

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதி 2024–25 ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் . 114/2024–25ன் வாயிலாக 24.09.2024 அன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பற்றிய விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.40க்குட்பட்ட ஒன்றிய காலனி பகுதியில் வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகம் மற்றும் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டும் பணி<br>மதிப்பீடு ரூ.25.90 இலட்சம்<br>**இ7/ 1867 /2024/மையம்** | 1. மெசர்ஸ். SS இன்ஃப்ரா, திருச்சி<br>0.05% குறைவு<br><br>2.மெசர்ஸ். ஜோதி கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், திருச்சி<br>1.39 % கூடுதல் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மெசர்ஸ் . SS இன்ஃப்ரா, திருச்சி நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்காலம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | வார்டு எண்.41க்குட்பட்ட தீனதயாளு நகர் பகுதியில் வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகம் மற்றும் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டும் பணி<br>மதிப்பீடு ரூ.25.90 இலட்சம்<br>**இ7/1865 /2024/மையம்** | 1. திரு,C. பட்டாபிராமன், திருச்சி<br>0.85% கூடுதல்<br>(ஒப்பந்தப்பேச்சு வார்த்தைக்குப் பின்)<br>0.01 % குறைவு<br><br>2. திரு.பெனோ சகாயராஜ் திருச்சி<br>(தொழில்நுட்ப தகுதி பெறவில்லை) | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு ,C. பட்டாபிராமன் ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக்காட்டிலும் 0.85% கூடுதலான ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருப்பினும், மேற்படி ஒப்பந்தக்காரரை அவர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்த சதவீதத்தை குறைத்து தரக் கோரியதில், திரு.C. பட்டாபிராமன் அவர்கள் தனது 25.09.2024ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டைக்காட்டிலும் 0.01% குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்காலம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 3 | வார்டு எண்.42க்குட்பட்ட விக்னேஷ் நகர் பகுதியில் வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகம் மற்றும் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டும் பணி<br>மதிப்பீடு ரூ.25.90 இலட்சம்<br>**இ7/ 1866/2024 /மையம்** | 1. மெசர்ஸ். NT இன்ஜினியரிங், திருச்சி<br>0.07% குறைவு<br><br>2.திரு.VR விஸ்வநாதன், திருச்சி<br>1.82 % கூடுதல் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மெசர்ஸ் . NT இன்ஜினியரிங், திருச்சி நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்காலம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு:** –

1. ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள்.24.09.2024ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளை பத்தி எண் .4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு கு ழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/1867/2024 (மையம்)**

**தீர்மானம் எண்:696 பொருள் : 16 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்: 17**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , மண்டலம்–4க்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2024–25ன் கீழ் , கீழ்க்கண்டுள்ள பணி யினை மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களது தீர்மான எண்.23, நாள்.04.07.2024ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதனை தொடர்ந்து , ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் . 124/2024–25 வாயிலாக கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 01.10.2024 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்து ரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | மண்டலம்–4, வார்டு எண்.53,54 க்குட்பட்ட தார்ச் சாலைகளை (BT Batch Work) சீரமைக்கும் பணி<br><br>**மதிப்பீடு ரூ.22.20 இலட்சம்** | 1.மெசர்ஸ்.SS.சுந்தர் கன்ஸட்ரக்சன்ஸ், திருச்சி<br>0.05% குறைவு<br><br>2.மெசர்ஸ்.MM எண்டர்பிரைசஸ், திருச்சி<br>1.24 % அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ்.SS சுந்தர் கன்ஸட்ரக்சன்ஸ், திருச்சி** ஒப்பந்ததாரர் **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்கண்டுள்ள பணிக்கு மாண்புமிகு மேயர் அவர்களது தீர்மான எண் .23, நாள்.04.07.2024ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4 / 4986/2024/ மையம்**

**தீர்மானம் எண்:697 பொருள் : 17 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்: 18**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதி 2024–25 ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் . 129/2024–25ன் வாயிலாக 01.10.2024 அன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பற்றிய விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்16க்குட்பட்ட வ.உ.சி தெரு, சிவகாமி அம்மையார் தெரு, ராணி அம்மையார் தெரு, நேதாஜி தெரு, தென்றல் நகர் ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் இடித்துவிட்டு புதிய மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி<br>**மதிப்பீடு ரூ.13.20 இலட்சம்.**<br>**இ7/ 6905/2024 (மையம்)** | 1)திரு. R. விஸ்வநாதன், திருச்சி<br>0.05 % குறைவு<br><br>2. திரு.C. பட்டாபிராமன்<br>0.62 % கூடுதல் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு . R. விஸ்வநாதன், ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05% குறைவான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்காலம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு: –**

1. ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள் . 04.09.2024ல் ஒப்புதல் அளித்துள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

**இ7/ 6905 /2024 (மையம்)**

**தீர்மானம் எண்:698 பொருள் : 18 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்: 19**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில், கல்வி நிதி 2024–25ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு, மாண்புமிகு மேயர் அவர்களின் தீர்மானம் எண்.32, நாள்.21.08.2024ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 105/2024–25ன் வாயிலாக 01.10.2024 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளிக் கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகளை ஏற்க மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டுக் குழு அலுவலகம் – IV, வார்டு எண்.57–க்குட்பட்ட எடமலைப்பட்டிபுதூர் ராஜிவ்காந்தி நகரில் புதிதாக கட்டப்பட்டு வரும் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிக்கு சமையலறை மற்றும் வைப்பறை கட்டும் பணி. **மதிப்பீடு ரூ. 32.00 இலட்சம்.** | 1) M/s. Sri Vinayaka & Co, திருச்சி. **0.05 % குறைவு**<br>2) M/s. SPM Construction, திருச்சி. **0.69 % கூடுதல்** | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் M/s. Sri Vinayaka & Co, திருச்சி நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு** :

1) மாண்புமிகு மேயர் அவர்களின் தீர்மானம் எண் .32, நாள்.21.08.2024ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2) மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்

**இ8 / 6447 / 2024 (மையம்)**

**தீர்மானம் எண்:699 பொருள் : 19 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்: 20**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதி 2024–25 ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் . 122/2024–25ன் வாயிலாக 27.09.2024 அன்று முதன் முறையாக ஒப்பந்த ப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற கீழ்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் விவரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பற்றிய விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | மண்டலம் 3, வார்டு எண்.38க்குட்பட்ட பாப்பாக்குறிச்சி பிரதான சாலையில் பாரிநகர் முதல் அண்ணா நகர், ஜி.டி. நாயுடு தெரு மற்றும் கக்கன் தெரு வரையிலான பகுதிகளில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் இடித்துவிட்டு புதிததாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி **மதிப்பீடு ரூ.46.40 இலட்சம் இ7/5998/2024(மையம்)** | 1. மெசர்ஸ். SS Infra, திருச்சி 0.06% குறைவு<br><br>2.மெசர்ஸ்.ஜோதி கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், 1.00 % கூடுதல் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மெசர்ஸ். SS Infra, திருச்சி நிறுவனம் மதிப்பீட்டைக்காட்டிலும் 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்காலம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு**: –

1. மாமன்ற தீர்மானம் எண் . 518 நாள்.30.08.2024ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணியினை பத்தி எண் .4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/5998/2024 (மையம்)**

**தீர்மானம் எண்:700 பொருள் : 20 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 21

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண்.54க்குட்பட்ட கி.ஆ.பெ. விஸ்வநாதன் அரசு மருத்துவக் கல்லூரிக்கு புதிதாக குடிநீர் குழாய் இணைப்பு வழங்கி, Flow meter வழங்கி பொருத்தி, SCADA கட்டுப்பாட்டு அறையுடன் இணைத்து கொடுக்கும் பணிக்கு **மதிப்பீடு ரூ.6.37 இலட்சம்** செலுத்த கோரியதில் (ரூ.6,17,000/– + ரூ.20,000/–) மாநகராட்சி வங்கி கணக்கில் 16.05.2024 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

எனவே குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05%** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 4163/2024 / மையம்)**

**தீர்மானம் எண்:701 பொருள் : 21 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 22

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் எண்.3, வார்டு எண்.39க்குட்பட்ட பகுதிகளில் தற்போது பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்ற பொழுது, பாலாஜி நகர் 14வது குறுக்கு தெரு முதல் 24 வது குறுக்கு தெரு வரையுள்ள வீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள குடிநீர் குழாய் இணைப்புகளில் ஆங்காங்கே உடைப்பு ஏற்பட்டுள்ளதால், அப்பகுதிவாழ் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்க இயலவில்லை.

எனவே குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும் மேற்கண்ட கசிவுகளை சரிசெய்வதற்கு **மதிப்பீடு ரூ.3.25 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.09%** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 4612 /2024 / மையம்)**

**தீர்மானம் எண்:702 பொருள் : 22 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 23

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–2, வார்டு எண்.59க்குட்பட்ட சர்க்கியூட் ஹவுஸ் மெயின் ரோட்டில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் 464 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது.

மேற்கண்ட குடியிருப்புகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கிட மதிப்பீடு ரூ.11.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் தொகை ICICI வங்கி வரைவோலை எண்.002246, நாள்.14.03.2024 வாயிலாக வழங்கப்பட்டுள்ளது.

எனவே குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07%** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 5465/2024 / மையம்)**

**தீர்மானம் எண்:703 பொருள் : 23 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 24

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கொள்ளிடம் ஆற்றங்கரையில் அமைக்கப்பட்டுள்ள **கலெக்டர் வெல் எண்.2 நீர்ப்பணி நிலையத்தில் உள்ள 100HP மின்மோட்டார் – 03 எண்கள்** மூலம் நாளொன்றிற்கு சராசரியாக 20 MLD பாதுகாக்கப்பட்ட குடிநீரானது பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மேற்படி நீர்ப்பணி நிலையம் அமைந்துள்ள இடங்களில் இரும்பு தாது நிறைந்த மண் படிமங்கள் அதிக அளவில் உள்ளதால், நீள்சுற்றுக்குழாய் வழியே நீர்ப்பணி நிலையத்தின் கிணற்றுக்குள் புகுந்து பம்புசெட் பகுதிகளான column pipe, shaft, spider, bowl assembly ஆகியவற்றில் அதிகளவில் மண் துகள்கள் படிந்து, குடிநீர் உந்தும் திறனை குறைந்து விடுகிறது.

எனவே குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி நீர்ப்பணி நிலையங்களில் உள்ள மின்மோட்டார் பம்பு செட்டுகளை முழுவதும் பிரித்து, சுத்தம் செய்திடும் பணியை மேற்கொள்ள பொது பணித்துறை 2024–25 தரப்படுத்தப்பட்ட விலைவிகிதப்படியும் மற்றும் இவற்றில் இல்லாத இனங்களுக்கு இத்துறையில் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெற்று அதனை சந்தை விலையுடன் ஒப்பீட்டு அவற்றில் குறைந்த விலைப்புள்ளியை கொண்டு **மதிப்பீடு ரூ.6.30 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.08%** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 6562 /2024 / மையம்)**

**தீர்மானம் எண்:704 பொருள் : 24 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 25

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , மண்டலம்–4க்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2023–24ன் கீழ் , பணிக்குழு தீர்மான எண் .37,40,41, நாள்.15.03.2024ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதனை தொடர்ந்து , கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் .126/2024–25ன் வாயிலாக 01.10.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மீது ஒப்பந்தப்புள்ளிக் கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்துள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| **பொது நிதி 2023–24** | | | |
| 1. | மண்டலம்–4, வார்டு எண்.61க்குட்பட்ட சந்தோஷ் நகர் மற்றும் சந்தோஷ் நகர் குறுக்கு தெரு போன்ற பகுதிகளில் மைய சுடுகலவை இயந்திரம் கொண்டு பேவர் பினிசர் மூலம் தார்சாலை அமைக்கும் பணி<br><br>**மதிப்பீடு: ரூ.18.00 இலட்சம்**<br>**இ4/1447/2024/மையம்** | 1.மெசர்ஸ்.SS சுந்தர் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி<br>0.05% குறைவு<br><br>2. மெசர்ஸ்.MM என்டர்பிரைசஸ், திருச்சி<br>0.94% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ்.SS சுந்தர் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | மண்டலம்–4, வார்டு எண்.61,64 மற்றும் 65க்குட்பட்ட நாகப்பா நகர், ARO நகர், கணேஷ் நகர், கல்யாண சுந்தர நகர், PG நகர் ஆகிய பகுதிகளில் Wetmix Macadam நிரப்பி கொடுக்கும் பணி<br><br>**மதிப்பீடு: ரூ.15.00 இலட்சம்**<br>**இ4/999/2024/மையம்** | 1. மெசர்ஸ்.MM என்டர்பிரைசஸ், திருச்சி<br>0.06% குறைவு<br><br>2. மெசர்ஸ்.SS சுந்தர் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி<br>1.21 % அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ்.MM என்டர்பிரைசஸ், திருச்சி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 3 | மண்டலம்–4, வார்டு எண். 65க்குட்பட்ட சத்தியா நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெரு. ஏ.ஆர்.எஸ்.நகர் , ஸ்ரீ சாய் நகர், எல்லோரா நகர், ஓம்சக்தி கார்டன் மற்றும் சங்கர் நகர் ஆகிய பகுதிகளில் ஜல்லி கற்கள் கொண்டு சாலைகளை சரிசெய்து கொடுக்கும் பணி<br>**மதிப்பீடு: ரூ.12.20 இலட்சம்**<br>**இ4/1448/2024/மையம்** | 1.மெசர்ஸ்.ஸ்ரீ ஆண்டாள் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி<br>0.06% குறைவு<br><br>2.மெசர்ஸ்.RV கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி<br>1.21% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். ஸ்ரீ ஆண்டாள் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்கண்ட பணிகளுக்கு பணிக்குழு தீர்மான எண்.37,40,41, நாள்.15.03.2024ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதனை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண். 4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4 /1447/2024/ மையம்**

**தீர்மானம் எண்:705 பொருள் : 25 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 26

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2024-25ன் கீழ், இப்பணியினை மேற்கொள்ள வார்டு குழு அலுவலகம் IV ன் தீர்மான எண்.199 நாள். 08.08.2024ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 132/2024-25 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 01/10/2024 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எ ண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு குழு அலுவலகம் 4 வார்டு எண் 62க்குட்பட்ட செட்டியப்பட்டி பாலம் (Subway), படுகை சுற்றுவட்ட சாலை சந்திப்பு மற்றும் வார்டு எண் 63க்குட்பட்ட சாத்தனூர் மெயின் ரோடு வடுகபட்டி ரோடு சுற்று வட்ட சாலை சந்திப்பு ஆகிய 3 இடங்களில் புதிதாக மின்கம்பம் அமைத்து அதில் 100 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் – 20 எண்கள் மற்றும் அதற்கு தேவையான இதர மின் உபகரணங்களை சப்ளை செய்து பொருத்தி இயக்கி தரும் பணி **மதிப்பீடு ரூ.5.70 இலட்சம்** | 1. M/S. பவர் எலெட்ரிக்கல் ஒர்க்ஸ் , திருச்சி 0.06% குறைவு<br><br>2, மெசர்ஸ். கே.வி.எஸ் எலக்ட்ரிக்கல்ஸ் , திருச்சி 0.11% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **M/S. பவர் எலெட்ரிக்கல் ஒர்க்ஸ், திருச்சி** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. வார்டு குழு அலுவலகம் IV ன் தீர்மான எண்.199 நாள். 08.08.2024ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 5322/2024 ( மையம்)**

**தீர்மானம் எண்:706 பொருள் : 26 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 27

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2024-25ன் கீழ், இப்பணியினை மேற்கொள்ள வார்டு குழு அலுவலகம் II ன் தீர்மான எண். 170 நாள். 30.07.2024ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 117/2024-25 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 27/09/2024 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எ ண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு குழு அலுவலகம் 2 வார்டு எண் 50க்குட்பட்ட Knowledge study centrல் புதிதாக 5 கேவிஏ ஆன்லைன் யூபிஎஸ் யூனிட்டு மற்றும் தேவையான 10 எண்கள் புதிதாக சப்ளை செய்து பொருத்தி இயக்கி தரும் பணி மற்றும் பீரங்கிகுளம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மைத்தில் மின் மராமத்து பணி மேற்கொள்ளுதல் **மதிப்பிடு ரூ.3.60 இலட்சம்** | 1.M/S.பி.எஸ்.எல். ஏஜென்ஸிஸ் திருச்சி 0.08% குறைவு<br>2,மெசர்ஸ். கே.வி.எஸ் எலக்ட்ரிக்கல்ஸ் திருச்சி 2.63% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **M/S. பி.எஸ்.எல். ஏஜென்ஸிஸ் திருச்சி** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.08 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. வார்டு குழு அலுவலகம் II ன் தீர்மான எண். 170 நாள். 30.07.2024ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 4569 / 2024 ( மையம்)**

**தீர்மானம் எண்:707 பொருள் : 27 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 28

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2024-25ன் கீழ், இப்பணியினை மேற்கொள்ள வார்டு குழு அலுவலகம் IV ன் தீர்மான எண்.198 நாள். 08.082024ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 131 / 2024-25 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 01.10.2024 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு குழு அலுவலகம் 4 மத்திய பேருந்து நிலையம் பயணிகள் தங்கும் அறையில் புதிதாக 5 எண்கள் குளிர்சாதன இயந்திரங்கள் பொருத்தும் பணி மற்றும் பீமநகர் மகப்பேறு மையத்தில் 3.5 கேவிஏ ஆன்லைன் யூபிஎஸ் யூனிட்டுகளுக்கு தேவையான மின்வயரிங் மற்றும் புதிதாக 12V 100 AH பேட்டரிகள் 4 எண்கள், பழுதாகி உள்ள 10 எண்கள் Ceiling Fan ஆகியவற்றை அகற்றிவிட்டு புதிதாக வழங்கி பொருத்தி இயக்கி தரும் பணி<br>**மதிப்பிடு ரூ.6.30 இலட்சம்** | 1.M/S.பி.எஸ்.எல். ஏஜென்ஸிஸ் திருச்சி 0.04% குறைவு<br><br>2, மெசர்ஸ். கே.வி.எஸ் எலக்ட்ரிக்கல்ஸ் , திருச்சி 5.55% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **M/S. பி.எஸ்.எல். ஏஜென்ஸிஸ் திருச்சி,** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.04 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. வார்டு குழு அலுவலகம் IV ன் தீர்மான எண். 198 நாள். 08/08/2024ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 4351 / 2024 ( மையம்)**

**தீர்மானம் எண்:708 பொருள் : 28 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 29

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில், பொது நிதி 2023–24ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு, வார்டு குழு – I, தீர்மானம் எண்.63, நாள்.07.11.2023ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து , ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் . 108/2024–25ன் வாயிலாக 01.10.2024 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் , கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளிக் கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகளை ஏற்க மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு குழு – I, வார்டு எண்.4க்குட்பட்ட களஞ்சியம் மெயின் ரோட்டில் (086004S0044) மைய சுடுகலவை இயந்திரம் மூலம் பேவர் பினிஷர் உதவியுடன் தார் சாலை சீரமைக்கும் பணி. மதிப்பீடு ரூ. 2.50 இலட்சம். | 1) M/s. Jyothi Constructions, திருச்சி. **0.03 % குறைவு**<br>2) M/s. SS Infraa, திருச்சி. **மதிப்பீட்டு விலை** | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் M/s. Jyothi Constructions, திருச்சி நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.03 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு** :

இந்நிலையில் மேற்படி நீர்ப்பணி நிலையம் அமைந்துள்ள இடங்களில் இரும்பு தாது நிறைந்த மண் படிமங்கள் அதிக அளவில் உள்ளதால், நீள்சுற்றுக்குழாய் வழியே நீர்ப்பணி நிலையத்தின் கிணற்றுக்குள் புகுந்து பம்புசெட் பகுதிகளான column pipe, shaft, spider, bowl assembly ஆகியவற்றில் அதிகளவில் மண் துகள்கள் படிந்து, குடிநீர் உந்தும் திறனை குறைந்து விடுகிறது.

எனவே குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி நீர்ப்பணி நிலையங்களில் உள்ள மின்மோட்டார் பம்பு செட்டுகளை முழுவதும் பிரித்து, சுத்தம் செய்திடும் பணியை மேற்கொள்ள பொது பணித்துறை 2024–25 தரப்படுத்தப்பட்ட விலைவிகிதப்படியும் மற்றும் இவற்றில் இல்லாத இனங்களுக்கு இத்துறையில் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெற்று அதனை சந்தை விலையுடன் ஒப்பீட்டு அவற்றில் குறைந்த விலைப்புள்ளியை கொண்டு **மதிப்பீடு ரூ.6.30 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05%** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 6561 /2024 / மையம்)**

**தீர்மானம் எண்:732 பொருள் : 52 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்: 53**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–5, வார்டு எண்.11க்குட்பட்ட சாலை ரோடு, மேரீஸ் இரயில்வே மேம்பாலம் திரும்ப கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேம்பாலத்தின் அடியில் இரயில்வே தண்டவாளத்தின் கீழ் 300 எம்.எம் விட்டமுள்ள குடிநீர் உந்து குழாய் பதிக்கப்பட்டு, உறையூர் தில்லை நகர் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பாலத்தினை இடித்து அகற்றும் பணி நடைபெற்று வரும் நிலையில், மேற்கண்ட குடிநீர் குழாயில் உடைப்புகள் ஏற்பட்டு, குடிநீர் விநியோகம் தடைபட்டும், பெருமளவு குடிநீர், உடைந்த குழாயின் வழியாக வெளியேறி கட்டுமானப் பணியில் தொய்வும் ஏற்பட்டுள்ளது.

எனவே குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி, மேற்கண்ட பகுதியில் ஏற்பட்டுள்ள உடைப்புகளை சரிசெய்ய **மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05%** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 6305 /2024 / மையம்)**

**தீர்மானம் எண்:733 பொருள் : 53 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்: 54**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2024-25ன் கீழ், இப்பணியினை மேற்கொள்ள வார்டு குழு அலுவலகம் IV ன் தீர்மான எண். 174 நாள். 19.02.2024 ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 65/2024-25 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 28.08.2024 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் 4 வார்டு எண் 54 க்குட்பட்ட அரிஸ்டோ ரவுண்டானா பாலத்தின் கீழ் மற்றும் மேற்பகுதியில் மாநகரை அழகுபடுத்தும் நோக்கில் 6 W LED Rope Light – 920 RM அதற்கு தேவையான இதர மின் உபகரணங்களை புதிதாக சப்ளை செய்து பொருத்தி இயக்கி தரும் பணி<br>**மதிப்பிடு ரூ.9.80 இலட்சம்** | 1.M/S.KVS எலக்ட்ரிக்கல்ஸ், திருச்சி<br>0.09% குறைவு<br><br>2,மெசர்ஸ்.பவர் எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் , திருச்சி<br>0.26% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **M/S. KVS எலக்ட்ரிக்கல்ஸ், திருச்சி** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.09 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. வார்டு குழு அலுவலகம் IV ன் தீர்மான எண். 174 நாள். 19.02.2024 ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 13401 / 2023 ( மையம்)**

**தீர்மானம் எண்:734 பொருள் : 54 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 55

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதி 2024–25 ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் . 57/2024–25ன் வாயிலாக 28.08.2024 அன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து வழங்கியு ள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் விவரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பற்றிய விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.35க்குட்பட்ட பகுதிகளில் உள்ள வாய்க்கால்களை இயந்திரம் மற்றும் மனித ஆற்றல் கொண்ட தூர் வாரும் பணி **மதிப்பீடு ரூ.6.95 இலட்சம் இ7/ 4384 /2024 (மையம்)** | 1)திரு. B. ரெங்கநாதன் 0,02 % குறைவு<br>2.திரு.S.வீராசாமி 0.65 % கூடுதல் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு. B. ரெங்கநாதன் ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக்காட்டிலும் 0.02% குறைவான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்காலம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | வார்டு எண்.37க்குட்பட்ட பகுதிகளில் உள்ள வாய்க்கால்களை இயந்திரம் மற்றும் மனித ஆற்றல் கொண்டு தூர் வாரும் பணி **மதிப்பீடு ரூ.5.90 இலட்சம் இ7/ 4382 /2024 (மையம்)** | 1)திரு. R. விஸ்வநாதன் 0,02 % குறைவு<br>2.திரு.C.பட்டாபிராமன் 1.56 % கூடுதல் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு. R. விஸ்வநாதன் ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.02% குறைவான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்காலம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 3 | வார்டு எண்.16க்குட்பட்ட பகுதிகளில் உள்ள வாய்க்கால்களை இயந்திரம் மற்றும் மனித ஆற்றல் கொண்டு தூர் வாரும் பணி **மதிப்பீடு ரூ.5.70 இலட்சம் இ7/ 4381 /2024 (மையம்)** | 1)M/s. AKRN கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் 0,02 % குறைவு<br>2).M/s. ASV கன்ஸ்ட்ரக்ஸன்ஸ். திருச்சி 3.84 % கூடுதல் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் M/s. AKRN கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் திருச்சி நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.02% குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்காலம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ள தை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு: –**

1. மேற்கண்ட அட்டவணையில் வரிசை எண் . 1 முதல் 3 வரை உள்ள பணிகளுக்கு பணிக் குழு தீர்மானம் எண் . 69 நாள்.29.07.2024ல் ஒப்புதல் அளித்துள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் வரிசை எண் . 1 முதல் 3 வரை உள்ள பணிகளுக்கு பத்தி எண் .4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

**இ7/ 4384 /2024 (மையம்)**

**தீர்மானம் எண்:735 பொருள் : 55 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 56

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2024-25ன் கீழ், இப்பணியினை மேற்கொள்ள பணிக்குழுவின் தீர்மானம் எண். 68 நாள். 29.07.2024ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 89 / 2024-25 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 11.09.2024 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் 2 வார்டு எண் 47க்குட்பட்ட டி.வி.எஸ் டோல்கேட் முதல் ஏர்போர்ட் வரை உள்ள மையதடுப்பில் புதிதாக எட்டுபட்டை வடிவமுடைய இருபக்க வளைவு கொண்ட மின்கம்பம் அமைத்து அதில் ஏற்கனவே உள்ள பழுதான மின்கம்பத்தில் கழற்றப்பட்ட 98 எண்கள் மற்றும் 2எண்கள் புதிய 120 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகளை பொருத்தி இயக்கி தரும் பணி<br>**மதிப்பிடு ரூ.16.35 இலட்சம்** | 1. M/S. **விக்னேஷ் எலக்ட்ரிக்கல்ஸ் திருச்சி** 0.06% குறைவு<br><br>2, **மெசர்ஸ். பாலாஜி எலக்ட்ரிக்கல்ஸ் , திருச்சி** 0.29% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **M/S. விக்னேஷ் எலக்ட்ரிக்கல்ஸ் திருச்சி** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. பணிக்குழுவின் தீர்மானம் எண். 68 நாள். 29.07.2024ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 4570 / 2023 ( மையம்)**

**தீர்மானம் எண்:736 பொருள் : 56 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 57

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுகுழு அலுவலகம் எண்.02, வார்டு எண்.18க்குட்பட்ட பகுதியில் **பொதுநிதி 2024–25**ன் கீழ், கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.112/2024–25ன் வாயிலாக 24.09.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரபெற்றுள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்க்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண்.18க்குட்பட்ட பீரங்கிகுளம் பூங்காவில் மராமத்து பணிகளை மேற்கொள்ளுதல்.<br><br>**மதிப்பீடு.ரூ.13.30 இலட்சம்** | 1. **திரு.எம் சுரேஷ், திருச்சி. 0.06 % குறைவு**<br><br>2. மெசர்ஸ்.ஜி ஆர் & சன்ஸ், **0.87 % கூடுதல்** | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.எம் சுரேஷ், திருச்சி ஒப்பந்தக்காரர் அவர்கள்** மதிப்பீட்டைக் காட்டிலும் **0.06 %** சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைந்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு.**

1. இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு ஆணையர் அவர்களால் நிர்வாக அனுமதி நாள்.23.08.2024ல் வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் உள்ள பணிக்கு பத்தி எண் .4ல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரப்படியான மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(இ2/ 6318/2024 (மை))**

**தீர்மானம் எண்:737 பொருள் : 57 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 58

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2024-25ன் கீழ், இப்பணியினை மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் தீர்மானம் எண்.22 நாள். 21.06.2024ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.78/2024-25 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 06.09.2024 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் 2 வார்டு எண் 47 க்குட்பட்ட அண்ணா ஸ்டேடியம் தலைமை கழிவுநீர் உந்து நிலையத்தில் உள்ள 350MM/ 700MM/ 900MM விட்டமுள்ள MS குழாய்களை அகற்றிவிட்டு புதிதாக பொருத்தவும் அதற்கு தேவையான இதர உபகரணங்களை சப்ளை செய்து பொருத்தி இயக்கி தரும் பணி **மதிப்பிடு ரூ.19.30 இலட்சம்** | 1. M/S. பவர் எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் திருச்சி 0.06% குறைவு<br>2. மெசர்ஸ். கே.வி.எஸ் எலக்ட்ரிக்கல்ஸ் , திருச்சி 0.43% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **M/S. பவர் எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் திருச்சி** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. மாண்புமிகு மேயர் அவர்களின் தீர்மானம் எண். 22 நாள். 21.06.2024ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 4354 /2024 ( மையம்)**

**தீர்மானம் எண்:738 பொருள் : 58 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 59

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்.II, வார்டு எண்47க்குட்பட்ட அண்ணா விளையாட்டு அரங்கில் 06.10.2024 முதல் 23.10.2024 வரையில் மாநில அளவிலான "தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை" விளையாட்டு போட்டிகள் நடைபெற உள்ளதனைத் தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்கும் மாணவ, மாணவிகளக்கு நடமாடும் கழிவறை, சின்டெக்ஸ் டேங்க் குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்திட வேண்டுமென 03.10.2024ம் நாளைய ஆய்வுக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவரால் அறிவுருத்தப்பட்டது.

அதன்படி, மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.7.90 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, இப்பணியின் அவசர அவசியம் கருதி **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.12%** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த M/s. GKV Construction, திருச்சி ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ3 / 8362 / 2024 (மை)**

**தீர்மானம் எண்:739 பொருள் : 59 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 60

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–3, வார்டு எண்.40க்குட்பட்ட ஒன்றிய காலனி நீர்தேக்க தொட்டியில் இருந்து செல்லும் 300 எம்.எம் விட்டமுள்ள AC குடிநீர் விநியோக குழாயில், காவேரி நகர் பொது கழிவறை அருகிலும், விஜய் ஜெனரல் ஸ்டோர், ஒன்றிய அலுவலகம் பின்புறம், மற்றும் வள்ளுவர் நகர் நீர்தேக்க தொட்டி ஆகிய பகுதியில் கசிவு ஏற்பட்டு சாலையில் குடிநீர் வீணாக சென்றதால், குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி, மேற்கண்ட இடங்களில் ஏற்பட்டுள்ள கசிவுகளை சரிசெய்ய **மதிப்பீடு ரூ.3.70 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07%** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 6564 /2024 / மையம்)**

**தீர்மானம் எண்:740 பொருள் : 60 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 61

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–3, வார்டு எண்.42க்குட்பட்ட கீழகல்கண்டார்கோட்டை பேருந்து நிறுத்தம், கந்தசாமி நகர், கீழகல்கண்டார்கோட்டை மேல்நிலை நீர்தேக்க தொட்டி எதிர்புறம் ஆகிய இடங்களில் செல்லும் 900 எம்.எம் விட்டமுள்ள DI குடிநீர் குழாயில் கசிவு ஏற்பட்டு சாலையில் குடிநீர் வீணாக சென்றதால், குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி, மேற்கண்ட இடங்களில் ஏற்பட்டுள்ள கசிவுகளை சரிசெய்ய **மதிப்பீடு ரூ.4.60 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.08%** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 6563 /2024 / மையம்)**

**தீர்மானம் எண்:741 பொருள் : 61 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 62

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 1, வார்டு எண். 6க்குட்பட்ட பழைய காவேரி பாலத்தில் செல்லும் 250 விட்டமுள்ள PSC பாதாள சாக்கடை கழிவுநீர் உந்து குழாயில் இணைப்பு பகுதிகளில் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் காவேரி ஆற்றில் கலக்கும் நிலை ஏற்படுகிறது. மேலும் ஒவ்வொரு இணைப்பு பகுதிக்கும் M.S Collor Joint செய்து தான் உடைப்பை சரிசெய்யும் நிலை ஏற்படுகிறது. எனவே உடைப்பு ஏற்பட்டவுடன் நிவர்த்தி செய்து முன் எச்சரிக்கையாக 7 எண்ணிக்கையில் MS Collor Joint செய்து அலுவலக இருப்பில் வைத்துகொள்வதற்கும் இப்பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக மேற்கொள்ள ரூ. 7.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீடு விலையை காட்டிலும் **0.08%** குறைவான விலை வீதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்த **M/s. Vishwa Infrstructure,** ஒப்பந்ததாரர் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 57(7) கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**இ6/6102/2024 மையம்**

**தீர்மானம் எண்:742 பொருள் : 62 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 63

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 1 வார்டு எண் 4, காந்தி ரோடு பிரதான சாலையில், மேம்பாலம் ஏறும் இடத்தில், அகிலா டீ கடை எதிரில் பாதாள சாக்கடை உந்து குழாயில் உடைப்பு ஏற்பட்டு, மண் அரிக்கப்பட்டு, சாலையில் திடீரென பள்ளம் ஏற்பட்டது. இந்த உந்துகுழாயின் மூலம் வார்டு எண் 1,2,3 மற்றும் 4 பகுதிகளிலிருந்து சேகரமாகும் கழிவுநீர், இக்குழாய் வழியே வாசுதேவன் பிரதான நிலையத்திற்கு சென்றடைகிறது. எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள பழுதடைந்த 700 எம் எம் விட்டமுள்ள கழிவுநீர் உந்து குழாயினை மாற்றி அமைக்கும் பணியினை அவசர அவசியம் கருதி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீடு விலையை காட்டிலும் **0.05%** குறைவான விலை வீதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்த **M/s. Vishwa Infrastructures,** ஒப்பந்ததாரர் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 57(7) கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**இ6/3988/2024 மையம்**

**தீர்மானம் எண்:743 பொருள் : 63 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 64

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு–Iக்குட்பட்ட பகுதியில், பொது நிதி 2024–25ன் கீழ் கீழ்கண்டுள்ள பணியினை மேற்கொள்வதற்கு , வார்டு குழு –I தீர்மானம் எண் .10, நாள்.09.08.2024ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து , இப்பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்பு ள்ளி அறிக்கை எண் . 67/2024–25ன் வாயிலாக 06.09.2024 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளிக் கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண் .04க்குட்பட்ட அம்பேத்கர் நகர் குறுக்கு சந்தில் தற்போது உள்ள கருங்கல் தளத்தினை அகற்றிவிட்டு சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி. **மதிப்பீடு ரூ.3.80 இலட்சம்.** | 1. திரு.எஸ்.வீராசாமி, திருச்சி. 0.04% குறைவு.<br>2. திரு. எம்.சுப்ரமணியன், திருச்சி. 0.07% கூடுதல். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு.எஸ்.வீராசாமி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.04 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு** :

1) வார்டுக் குழு –I, தீர்மானம் எண் .10, நாள்.09.08.2024ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2) மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ8 / 5133 / 2024 (மையம்)**

**தீர்மானம் எண்:744 பொருள் : 64 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 65

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், பொது நிதி 2024–25ன் கீழ், அட்டவணையில் கண்டுள்ள பணிகளை மேற்கொள்வதற்கு மாமன்றத் தீர்மானம் எண்.155, நாள்.21.02.2024ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுதைத் தொடர்ந்து, 6 பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 103/2024–25ன் வாயிலாக 10.09.2024 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு 4 பணிகளுக்கு மட்டும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளிக் கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு குழு –III, வார்டு எண்.43க்குட்பட்ட காவேரி நகரில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் பணி. **மதிப்பீடு ரூ. 16.95 இலட்சம். இ8/5458/2024(மையம்)** | 1. திரு. C. பட்டாபிராமன், திருச்சி. 0.05% குறைவு.<br>2. திரு. ஆர். விஸ்வநாதன், திருச்சி. 0.72% கூடுதல். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு.C.பட்டாபிராமன்**, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | வார்டு குழு –I, வார்டு எண்.13க்குட்பட்ட மலைக்கோட்டை பகுதியில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண். 33614130210க்கு புதிய கட்டிடம் கட்டும் பணி. **மதிப்பீடு ரூ. 16.95 இலட்சம். இ8/5459/2024(மையம்)** | 1. திரு.எஸ்.கோவிந்தராஜ், திருச்சி. 0.06% குறைவு.<br>2. திரு.எம்.சின்னதம்பி, திருச்சி. 0.39% கூடுதல். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு.எஸ்.கோவிந்தராஜ்**, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 3 | வார்டு குழு –V, வார்டு எண்.11க்குட்பட்ட பெருமாள் கோவில் தெருவில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண். 33614130420க்கு புதிய கட்டிடம் கட்டும் பணி. **மதிப்பீடு ரூ. 18.40 இலட்சம். இ8/5460/2024(மையம்)** | 1. திரு.பி.கிருஷ்ணமூர்த்தி, திருச்சி. 0.06% குறைவு.<br><br>2. M/s. LRS & Co, திருச்சி. 0.60% கூடுதல். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு.பி.கிருஷ்ணமூர்த்தி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 4 | வார்டு குழு –IV, வார்டு எண்.61க்குட்பட்ட ஏர்போர்ட் பகுதியில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண். 33614130105க்கு புதிய கட்டிடம் கட்டும் பணி. **மதிப்பீடு ரூ. 14.75 இலட்சம். இ8/5463/2024(மையம்)** | 1. திரு. டி.இளஞ்செழியன், திருச்சி. 0.05% குறைவு.<br><br>2. திரு. ஜி. கண்ணன், திருச்சி. 1.05% கூடுதல். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு.டி.இளஞ்செழியன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு** :

அட்டவணையில் வ.எண். 1 முதல் 4 வரை கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண் 4ல் கண்டுள்ள குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(இ8 / 5458 / 2024 (மையம்)**

**தீர்மானம் எண்:745 பொருள் : 65 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 66

இம்மாநகராட்சியின் பொது சுகாதார பணிக்கு தேவையான மேனுவல் ஸ்வீப்பீங் இயந்திரங்கள் 60 எண்கள் (manually operated walk –Behind sweeping machine ) கொள்முதல் செய்யும் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 09/2024–2025ன் வாயிலாக 28.08.2024 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள் ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலிக்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டு விலையை விட) | |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | இம்மாநகராட்சியின் பொது சுகாதார பணிக்கு தேவையான மேனுவல் ஸ்வீப்பீங் இயந்திரங்கள் 60 எண்கள் (manually operuted walk–Behind sweeping machine ) கொள்முதல் செய்யும் பணியினை மேற்கொள்ளுதல் **(மதிப்பீட்டு தொகை ரூ.24.28/– இலட்சம்)** | **1 M/S. Roots Multiclean Ltd, Coimbatore.**<br><br>**2. M/s Anago Trading, Madhurai** | – 0.19% (குறைவு)<br><br>–0,02% (குறைவு ) | M/S. Roots Multiclean **LTd** நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் – 0.19% குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. இப்பணிக்கான மதிப்பீடு ரூ . 24.28 /– இலட்சத்திற்கு ஆணையர் அவர்களின் தீர்மானம் எண் . 92 நாள்:07.08.2024 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. M/s, Roots Multiclean Ltd, கோயம்புத்தூர் நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
3. இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி M/s Roots Multiclean Ltd , கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மாமன்றம் ஏற்கலாம்.

**[எச்14/6114/2024 (மையம்)]**

**தீர்மானம் எண்:746 பொருள் : 66 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 67

இம்மாநகராட்சியின் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கை பணிக்கு தேவையான பதிவேடுகள் மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணி குறிப்பு காலண்டர் ஸ்டிக்கர்கள் கொள்முதல் செய்யும் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 13/2024–2025ன் வாயிலாக 19.09.2024 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலித்து பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டு விலையை விட) | |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | டெங்கு ஆய்வு குறித்த பதிவேடுகள் மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணி குறிப்பு காலண்டர் ஸ்டிக்கர்கள் கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ளுதல் **(மதிப்பீட்டு தொகை ரூ.5.50 இலட்சம்)** | M/s **Kamala arts Vellore**<br><br>2. **M/s Kavi signage & Decors Vellore** | 1.36 % (குறைவு)<br><br>2.73% (அதிகம் ) | **M/S.** Kamala arts நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் 1.36 % குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. இப்பணிக்கான மதிப்பீடு ரூ . 5.50 இலட்சம் தொகைக்கு ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள்:24.08.2024 வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. **M/s, Kamala Arts, Vellore** நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
3. இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி **M/s Kamala Arts, Vellore** நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மாமன்றம் ஏற்கலாம்.

**[எச்4/6682/2024 (மையம்)]**

**தீர்மானம் எண்:747 பொருள் : 67 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 68

இம்மாநகராட்சியின் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்நல மையங்கள் மூலம் வழங்கி வரும் மருத்துவ பணிகள் தொடர்பான விவரங்கள் பதிவு செய்ய தேவையான பதிவேடுகள் கொள்முதல் செய்யும் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறி க்கை எண் 12/2024–2025ன் வாயிலாக 13.09.2024 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலித்து பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டு விலையை விட) | |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | மருத்துவ பணிகள் பதிவு செய்வதற்கு தேவையான பதிவேடுகள் கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ளுதல் **(மதிப்பீட்டு தொகை ரூ.22,25/–இலட்சம்)** | M/s **Krishna Printers, Trichy–17**<br><br>2. **M/s Sri Parasakthi Enterprises -**<br><br>**Trichy -21** | 0.44% (குறைவு)<br><br>**0.48**% (அதிகம் ) | **M/S. Krishna Printers,** நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.44**% குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. இப்பணிக்கான மதிப்பீடு ரூ . 22.25/- இலட்சம் தொகைக்கு ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள்:24.08.2024 வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. **M/s, Krishna Printers,** திருச்சி நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
3. இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி **M/s Krishna Printers,** திருச்சி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மாமன்றம் ஏற்கலாம்.

[**எச்4/5289/2024 (மையம்)**]

**தீர்மானம் எண்:748 பொருள் : 68 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 69

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 3, வார்டு எண். 16க்குட்பட்ட திருச்சி சென்னை நெடுஞ்சாலை விஸ்வாஸ் நகர் வழியாக செல்லும் 700 MM விட்டமுள்ள RCC Pipe பாதாள சாக்கடை கழிவுநீர் உந்து குழாயில் உடைப்பு ஏற்பட்டு குழாய் முழுவதும் மண் நிரம்பி கழிவுநீர் கசிந்து தெருக்களில் வெளியேறி சுகாதாரக்கேடு விளைவிப்பதை தவிர்க்கும் பொருட்டு, உடனடியாக சேதமடைந்த உந்து குழாய்களை அகற்றி, புதிய 700 MM விட்டமுள்ள MS குழாய் பதிக்கவும் இப்பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக மேற்கொள்ள ரூ.2.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீடு விலையை காட்டிலும் **0.07%** குறைவான விலை வீதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்த **M/s. A.S. Power Solutions, Trichy,** ஒப்பந்ததாரர் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 57(7) கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**இ6/3990/2024 மையம்**

**தீர்மானம் எண்:749 பொருள் : 69 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 70

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் எண் – I, வார்டு எண். 4 காந்தி ரோடு, நெல்சன் ரோடு சந்திப்பு பகுதியில் வழியே வார்டு எண் 1,2&3 பகுதி மற்றும் 4 தெருகிளில் சேகரமாகும் கழிவுநீர் வாசுதேவன் தெரு பிரதான கிணற்றில் சேகரிக்கப்பட்டு பஞ்சப்பூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்கிறது. இதில் நெல்சன் சாலையில் 750 MM விட்டமுள்ள PSC குழாய் உடைந்து பள்ளம் விழுந்து போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளது, உடனடியாக சேதமடைந்த PSC உந்து குழாய்களை அகற்றி புதிய 600 எம் எம் விட்டமுள்ள AC குழாய் அமைக்கவும், இப்பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக மேற்கொள்ள ரூ.2.95 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீடு விலையை காட்டிலும் **0.09%** குறைவான விலை வீதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்த **M/s. Vishwa Infrastructures** ஒப்பந்ததாரர் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 57(7) கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**இ6/6103/2024 மையம்**

**தீர்மானம் எண்:750 பொருள் : 70 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 71

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 3, வார்டு எண். 35க்குட்பட்ட திருச்சி சென்னை நெடுஞ்சாலை சங்கிலியாண்டபுரம் பேருந்து நிறுத்தம் வழியாக 700 MM விட்டமுள்ள AC Pipe பாதாள சாக்கடை கழிவுநீர் உந்து குழாயில் உடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் கசிந்து தெருக்களில் வெளியேறி சுகாதாரக்கேடு விளைவிப்பதை தவிர்க்கும் பொருட்டு, உடனடியாக சேதமடைந்த உந்து குழாய்களை அகற்றி புதிய 700 MM விட்டமுள்ள MS குழாய் பதிக்கவும். வார்டு எண் 16க்குட்பட்ட கலைஞர் நகர் அருகில் 150 எம் எம் விட்டமுள்ள AC குழாயில் ஏற்பட்டுள்ள உடைப்பினை சரி செய்யவும் இப்பணிகளின் அவசர அவசியம் கருதி உடனடியாக மேற்கொள்ள ரூ.3.40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீடு விலையை காட்டிலும் **0.06%** குறைவான விலை வீதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்த **M/s. Vishwa Infrastructure,** ஒப்பந்ததாரர் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 57(7) கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**இ6/3489/2024 மையம்**

**தீர்மானம் எண்:751 பொருள் : 71 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 72

இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண் LON06HQF/27352/2024/TCP, நாள் 29.05.2024ல், மனுதாரர் திரு.P.ரகுநாதன் என்பவருக்கு, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 3, தாராநல்லூர் கிராமம், பழைய சர்வே எண் 10/A1, புதிய சர்வே எண் 87/1, புதிய வார்டு Q, பிளாக் எண் 1, நகரளவு எண் 4/1, உட்பிரிவு நகரளவு எண் 43/1–க்குட்பட்ட 1.13 ஏக்கர் (4613.00 ச.மீ.) பரப்பளவு கொண்ட இடத்தில், புதிதாகக் **குடியிருப்பு மனைப்பிரிவு** அமைக்க, ம.வ. / ந.ஊ.இ.இ. (திமா) எண் 110/2024 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதலும், மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு 78/2024 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர், உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சாலைகள் (1559.18 ச.மீ.), மூலைமுடக்குகள் (6.75 ச.மீ.), மற்றும் உள்ளாட்சிக்கான இடம் (28.40 ச.மீ.) ஆகியவற்றை, தானமாகப் பத்திரப் பதிவு செய்து, ஆவண எண் 2103/2024, நாள் 28.05.2024ன் வாயிலாக மாநகராட்சிக்கு ஒப்படைப்புச் செய்துள்ளார்.

மேலும், மனுதாரர், மனைப்பிரிவின் அடிப்படைத் தேவைகளான தார்ச் சாலைகள், குடிநீர்க் குழாய்கள் மற்றும் மழைநீர் வடிகால் அமைப்புகளை தனது சொந்தச் செலவில் தரமான முறையில் அமைத்துள்ளார். எனவே, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம்'2023, பிரிவு 120 (4)ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றி மேற்படி மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கலாம்.

அதனைத் தொடர்ந்து, மேற்படி சுற்றறிக்கையின்படி, இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களின் செயல்முறை உத்தரவுடன் இணைத்துப் பெறப்பட்ட உத்தேச மனைப்பிரிவின் வரைபடமும், அசல் தானப்பத்திரமும் இம்மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>** மேற்படி உத்தேச மனைப்பிரிவின் வரைபடத்திற்கு ஒப்புதலளித்து, இறுதி மனைப்பிரிவு அங்கீகார உத்தரவு வழங்கிட, மாமன்றம் உரிய ஒப்புதல் வழங்கலாம்.

**(எப்1/4145/2024/வா.கு.அ.3)**

**தீர்மானம் எண்:752 பொருள் : 72 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 73

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுகுழு அலுவலகம்–1 உட்பட்ட வார்டு எண்–4 க்கு உட்பட்ட டிரங்க் ரோடு சக்தி நகர் நுழைவு வட்டாட்சியர் அலுவலகம் செல்லும் வழியில் ஆவின் பால் பூத் பால் உற்பத்தி பொருட்கள் விற்பனை மையம் 12x8 அமைத்து செயல்படுத்த அனுமதி வழங்குமாறு மாவட்ட வருவாய் அலுவலர். பொது மேலாளர் திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட், கொட்டப்பட்டு புதுக்கோட்டை ரோடு திருச்சிராப்பள்ளி –620023 ந.க.எண்.2745/விற்பனை/2022–2023 நாள்.30.07.2024. ஆம் தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

அதன்படி, மேற்படி இடத்தினை சம்மந்தப்பட்ட இளநிலை பொறியாளர் நேராய்வு மேற்கொண்டு, டிரங்க் ரோடு சக்தி நகர் நுழைவு வட்டாட்சியர் அலுவலகம் செல்லும் வழியில் 12x8 அளவுள்ள இடத்தினை ஆவின் பாலகம் அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்ய தரை வாடகையின் அடிப்படையில் ஆவின் பாலகம் அமைத்துக் கொள்ள இடத்தின் வரைபடம் மற்றும் வாடகை கணக்கீட்டு படிவமும் இளநிலை பொறியாளரால் (பொ) தயார் செய்து வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் மேற்படி இடத்திற்கு தமிழ் நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023–ல் விதி 316(1)மற்றும் 316(3)ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மாதவாடகையாக (Area x Guideline value x 3%) 8.91 ச.மீ x 26050 x 3% = Rs, 6963/– GST 18% ரூ.1253/–சேர்த்து மாதம் வாடகை நிர்ணயம் செய்தும் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டும். மேற்படி இடத்தில் ஆவின் பாலகம் அமைத்து ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்து கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி வேண்டி கருத்துருக்கள் அனுப்புவதற்கு அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு இடம் ஒதுக்கீடு செய்வதற்கும் மாத வாடகை ரூ.6963/– GST 18% ரூ.1253/–சேர்த்து மாதம் வாடகை நிர்ணயம் செய்வதற்கும் அனுமதி வழங்கலாம்.
2. பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மேற்படி இடத்தில் ஆவின் பாலகம் அமைத்து விற்பனை செய்வதற்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று வழங்கலாம்.

**அ1/4193/2024(வா.கு.அ–1)**

**தீர்மானம் எண்:753 பொருள் : 73 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 74

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுகுழு அலுவலகம் 1, வார்டுஎண்.2க்குட்பட்ட ஸ்ரீரங்கம் மேலசித்திரை வீதியில் மொத்தம் 317 வீடுகள் உள்ளன. இதில் அனைத்து வீடுகளுக்கும் புதைவடிகால் இணைப்பு வழங்க வேண்டி கடந்த 2003ஆம் ஆண்டு அறிவிப்பு அனுப்பப்பட்டு, அதனடிப்படையில் 36 வீடுகளுக்கு புதைவடிகால் வைப்புக்கட்டணம் ரூ.6000/-பெறப்பட்டது. அதனை தொடர்ந்து 2019ஆம் ஆண்டு முதல் மேற்படி பகுதிகளுக்கு புதைவடிகால் வசதி ஏற்படுத்தப்பட்டு 36 வீடுகளுக்கு புதைவடிகால் இணைப்புகள் வழங்கியதும் வரி எழுப்பப்பட்டு நடப்பாண்டு வரை வரி செலுத்தி வருகிறார்கள்.

இந்நிலையில் மனுதாரர் தனது வீட்டிற்கு புதைவடிகால் இணைப்புக் கட்டணம் 2009 - 2010 முதல் கேட்பு எழுப்பட்டதாகவும் இதனை நீக்கம் செய்து தரும் படியும் தொடர்ந்து கோரிக்கை மனு செய்து வருகிறார்.

மனுதாரரின் கோரிக்கையை ஏற்று மேற்கண்ட இடம் நேராய்வு செய்யப்பட்டு, மனுதாரருக்கு புதைவடிகால் இணைப்பு 01.04.2019ஆம் ஆண்டுக்கான வரிவிதிப்பு எண்.086/002/900232 வழங்கப்பட்டது ஆய்வில் தெரிய வருகிறது. எனவே கணினியில் தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்ட 2009 -10 III காலாண்டு முதல் 2018-19 IV காலாண்டு வரை உள்ள புதைவடிகால் இணைப்பிற்கான தொகை ரூ.3720 /-யை நீக்கம் செய்ய மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவகலக்குறிப்பு**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் 1க்குட்பட்ட வார்டுஎண் .2 கதவு எண் 41 மேல சித்திரை வீதி , ஸ்ரீரங்கம் என்ற முகவரியிலுள்ள வீட்டிற்கு புதைவடிகால் இணைப்பு 086/002/900232 கணினியில் தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்ட 2009-2010 முதல் 2018-2019 வரை ரூ.3720/-ஐ நீக்கம் செய்ய அனுமதிக்கலாம்.

**இ1/5028/2024(ம1)**

**தீர்மானம் எண்:753 பொருள் : 73 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 75

இம்மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் -2ல் காந்தி சந்தை எதிர்புறம் உள்ள டைமண்ட் ஜுப்ளி கட்டிட வளாகத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வந்த மூன்றாண்டு குத்தகை இனமான மீன் சந்தை கடந்த 01.01.2024 முதல் துறை ரீதியான வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது . இந்நிலையில் கீழரண் சாலையில் உள்ள புதிய மீன் மற்றும் இறைச்சி அங்காடி கடைகள் கடந்த 23.07.2024 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்று உயர்ந்தபட்ச மா த வாடகை கோரியவர்களுக்கு கடை ஒப்படைப்பு செய்யப்பட்டது.

எனவே மாற்று இடங்களில் செயல்பட்டு வந்த அனைத்து இறைச்சி கடைகளும் கடந்த 27.09.2024க்குள் அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக மீன் சந்தையும் அப்புறப்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து துறை வாரியான வசூல் பணியும் 27.09.2024 அன்று வரை மேற்கொள்ளப்பட்டது . தற்சமயம் மீன் சந்தையில் கடை நடத்தி வந்த நபர்கள் அனைவரும் புதிய மீன் மற்றும் இறைச்சி அங்காடியில் கடை நடத்தி வருவதன் காரணமாக மூன்றாண்டு குத்தகை இனமான மீன் சந்தை இனத்தினை மூன்றாண்டு குத்தனை இனத்திலிருந்து நீக்கம் செய்திட மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**

1. காந்தி சந்தை எதிர்புறம் உள்ள டைமண்ட் ஜுப்ளி கட்டிட வளாகத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வந்த மூன்றாண்டு குத்தகை இனமான மீன் சந்தை 01.01.2024 முதல் துறை ரீதியான வசூல் பணி மேற்கொள்ள பட்டு வந்த நிலையில் கடந்த 27.09.2024 முதல் இம்மாநகராட்சியால் அப்புறப்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து இவ்வினத்தினை நீக்கம் செய்யலாம்.
2. புதிய மீன் சந்தை மற்றும இறைச்சி அங்காடி கடைகள் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் மீன் சந்தையில் உள்ள கடைகாரர்களுக்கு மாமன்ற தீர் மானம் எண் .561 நாள்.30.08.2024ன் படி கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து இக்குத்தகை இனத்தில் செயல்பட்டு வந்த கடைகள் கட்டிட கடைகளுக்கான மாத வாடகைக்கு மாற்றம் செய்யப்பட்டதால் இவ்வினத்தினை நீக்கம் செய்யலாம்
3. எனவே மேற்கண்ட மூன்றாண்டு குத்தகை இனமான மீன் சந்தை இனத்தினை நீக்கம் செய்வதினால் இம்மாநகராட்சிக்கு எவ்வித வருவாய் இழப்பும் ஏற்படாது

**(1630/2022 வா.கு.அ-2)**

**தீர்மானம் எண்:755 பொருள் : 75 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 76

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , மண்டலம் 5, வார்டு எண்.22க்குட்பட்ட செட்டிப்பேட்டை தெருவில் உள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டப்பட்டு சுமார் 13 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அப்பகுதியில் வசிப்பவர்களின் குடியிருப்பில் அணைத்து வீடுகளிலும் கழிவறை அமைக்கப்பட்டுள்ளதால், ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் பயனற்று பழுதடைந்துள்ளது. அவ்வளாகத்தில் இரவு நேரங்களில் சமூக விரோதிகளால் சட்டத்திற்கு புறம்பான செயல்கள் செய்து வருவதால், ஒருங்கிணைந்த சுகாதார வளாகத்தினை இடித்து அப்புறப்படுத்தவும், பொதுமக்கள் பயன் பெறும் வகையில் சமுதாய கூடம் அல்லது ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட மையம் அமைத்து கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது,

தற்போது இந்த கழிப்பிடமானது பொதுமக்கள் பயன்பாட்டில் இல்லாததாலும், சமூக விரோத செயல்கள் தடுக்கும் பொருட்டும், கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த மாமன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு.</u>**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பழுதடைந்துள்ள கட்டிடத்தினை முற்றிலுமாக இடித்து அப்புறப்படுத்த ஒப்பந்தப்புள்ளி / ஏலம் அறிவிப்பு கோர மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ1/ 8235 /2024 (மண்டலம்.5)**

**தீர்மானம் எண் :756 பொருள் : 76 வார்டு எண்22 என்பதற்கு பதிலாக வார்டு எண்.23 திருத்தத்துடன் அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 77

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள தலைமை நீர்ப்பணி நிலையத்தினை ஓராண்டிற்கு இயக்கி பராமரித்திட மதிப்பீடு ரூ.25.65 இலட்சத்திற்கு தயார் செய்து மாமன்றத் தீர்மான எண்.138, நாள்.26.07.2022ல் நிர்வாக அனுமதி வழுங்கப்பட்டதன் அடிப்படையில், ஒப்பந்தப்புள்ளிகள் 30.08.2022ல் பெறப்பட்டு, மெசர்ஸ்.விஸ்வா இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் நிறுவனம் வழங்கிய குறைவான விலைப்புள்ளியினை ஏற்று மாமன்ற தீர்மான எண்.207, நாள்.29.09.2022ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதன் அடிப்படையில், 01.10.2022 முதல் மேற்கண்ட நிறுவனம் தலைமை நீர்ப்பணி நிலையத்தினை நல்ல முறையில் கீழ்க்கண்டவாறு இயக்கி பராமரித்து வருகின்றனர்.

| **வ. எண்.** | **பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டு வரும் காலம்** | **விபரம்** | **நிலை** |
|---|---|---|---|
| 1. | 01.10.2022 – 30.09.2023 (12 மாதம்) | ஒரு வருட பராமரிப்பு | முடிவடைந்துள்ளது |
| 2. | 01.10.2023–30.09.2024 (12 மாதம்) | 10% உயர்த்தி – முதல் வருட கால நீட்டிப்பு | 30.09.2024 உடன் முடிவடைய உள்ளது |
| 3. | 01.10.2024 –30.09.2025 (12 மாதம்) | 10% உயர்த்தி – இரண்டாம் வருட கால நீட்டிப்பு | காலநீட்டிப்பு செய்யப்பட வேண்டிய காலம் |

இவ்வாறான நிலையில் மேற்கண்ட நீர்ப்பணி நிலையத்தினை இயக்கி பராமரிக்கும் பணியானது வரும் 30.09.2024 உடன் முடிவடைய உள்ளது. மேற்கண்ட மாமன்றத் தீர்மான எண்.138, நாள்.26.07.2022ல் அனுமதி வழுங்கப்பட்டதன் அடிப்படையில், நல்ல முறையில் இயக்கி பராமரிக்கும் பட்சத்தில் மேலும் கூடுதலாக இரண்டு ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு செய்திடவும், ஒப்பந்த தொகையில் 10 சதவீதம் உயர்த்தி (முதல் வருடம் நீங்கலாக) வழங்குவதற்கும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

எனவே, மெசர்ஸ்.விஸ்வா இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் நிறுவனம் நிறுவனத்தார் **தலைமை நீர்பபணி நிலையத்தினை** கடந்த இரண்டு ஆண்டுகளாக நல்ல முறையில் பராமரித்து வருவதால், மேலும் 12 மாதங்களுக்கு பராமரிக்க கால நீட்டிப்பு செய்து ஆணை வழங்கிடவும், ஏற்கனவே வழங்கி வரும் மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ.2,57,432/–ன் படி, 10 சதவீதம் ரூ.25,743/– **உயர்த்தி, சரக்கு மற்றும் சேவை வரி மாதம் ஒன்றுக்கு ரூ.2,178.64/– சேர்த்து, மாதம் ரூ. 2,85,353.64/– வீதம் 12 மாதங்களுக்கு (01.10.2024 முதல் 30.09.2025 முடிய) ஏற்படும் செலவினம் ரூ.34,24,243.68/–ஐ** மேற்கொள்ள அனுமதி கோரி மாமன்ற பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. மெசர்ஸ்.விஸ்வா இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் நிறுவனம் நிறுவனத்தார் **தலைமை நீர்பபணி நிலையத்தினை** கடந்த இரண்டு ஆண்டுகளாக நல்ல முறையில் பராமரித்து வருவதால் மேலும் 12 மாதங்களுக்கு பராமரிக்க கால நீட்டிப்பு செய்து ஆணை வழங்கிட அனுமதி அளிக்கலாம்.
3. இப்பணிக்கு மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ.2,57,432/-ன் படி, 10 சதவீதம் ரூ.25,743/- **உயர்த்தி, சரக்கு மற்றும் சேவை வரி மாதம் ஒன்றுக்கு ரூ.2,178.64/- சேர்த்து, மாதம் ரூ. 2,85,353.64/- வீதம் 12 மாதங்களுக்கு (01.10.2024 முதல் 30.09.2025 முடிய) ஏற்படும் செலவினம் ரூ.34,24,243.68/-ஐ** மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.
4. மேற்கண்ட தொகையினை 2024-25ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் (2305009) குடிநீர் வழங்கு பணிகள் - பராமரிப்பு செலவினங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.2000.00 இலட்சத்திலிருந்து செலவு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**இ4/8714/2022/மையம்**

**தீர்மானம் எண்:757 பொருள் : 77 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 78

இம்மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் அமைந்துள்ள கலெக்டர் வெல் ஆளவந்தான் படித்துறை, கலெக்டர் வெல் எண்.1, 2, பொது தரைமட்ட கிணறு ஆண்டவர் ஆசிரமம், கலெக்டர் வெல் எண்.3, மேலூர் ஆகியவை கொள்ளிடம் ஆற்றங்கரையிலும் பொன்மலைப்பட்டி-இடைநிலை நீர்தேக்க தொட்டி ஆகியவற்றை இயக்கி பராமரித்திட மதிப்பீடு ரூ.80.20 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மான எண்.176, நாள்.26.08.2022ல் அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், ஒப்பந்தப்புள்ளிகள் 07.10.2022ல் பெறப்பட்டு, மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனம் வழங்கிய குறைவான விலைப்புள்ளியினை ஏற்று மாமன்ற தீர்மான எண்.238, நாள்.28.10.2022ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதன் அடிப்படையில், 01.11.2022 முதல் மேற்கண்ட நிறுவனம் நிலையத்தினை நல்ல முறையில் கீழ்க்கண்டவாறு இயக்கி பராமரித்து வருகின்றனர்.

| வ. எண். | பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டு வரும் காலம் | விபரம் | நிலை |
|---|---|---|---|
| 1. | 01.11.2022 - 31.10.2023 (12 மாதம்) | ஒரு வருட பராமரிப்பு (முதலாம் ஆண்டு) | முடிவடைந்துள்ளது |
| 2. | 01.11.2023 - 30.04.2024 (6 மாதம்) | 10% உயர்த்தி - 2ம் ஆண்டு (முதல் வருட கால நீட்டிப்பு ) | முடிவடைந்துள்ளது |
| 3. | 01.05.2024 - 31.10.2024 (6 மாதம்) | | 31.10.2024 உடன் முடிவடைய உள்ளது |
| 4. | 01.11.2024 -31.03.2025 (5 மாதம்) | 10% உயர்த்தி - 3ம் ஆண்டு (இரண்டாம் வருட கால நீட்டிப்பு ) | காலநீட்டிப்பு செய்யப்பட வேண்டிய காலம் |

இவ்வாறான நிலையில் மேற்கண்ட நீர்ப்பணி நிலையத்தினை இயக்கி பராமரிக்கும் பணியானது வரும் 31.10.2024 உடன் முடிவடைய உள்ளது. மேற்கண்ட மாமன்றத் தீர்மான எண்.176, நாள்.26.08.2022ல் அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், நல்ல முறையில் இயக்கி பராமரிக்கும் பட்சத்தில் மேலும் கூடுதலாக இரண்டு ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு செய்திடவும், ஒப்பந்த தொகையில் 10 சதவீதம் உயர்த்தி (முதல் வருடம் நீங்கலாக) வழங்குவதற்கும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனம் மேற்கண்ட நீரேற்று நிலையங்களை கடந்த இரண்டு வருடங்களாக நல்ல முறையில் இயக்கி பராமரித்து வருவதால், மேலும் 5 மாதங்களுக்கு மட்டும் (3ம் ஆண்டு) இயக்கி பராமரிக்க, 01.11.2024 முதல் 31.03.2025 வரை கால நீட்டிப்பு செய்து ஆணை வழங்கிடவும், மாதாந்திர ஒப்பந்த தொகையுடன் கூடுதலாக சரக்கு மற்றும் சேவை வரி 18% சேர்த்து பின்வருமாறு வழங்க வேண்டியுள்ளது.

| வ. எண். | தற்போது வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஒப்பந்த தொகை | தற்போது 3ம் ஆண்டு10% உயர்த்தி வழங்கப்பட வேண்டிய தொகை | மொத்தம் | சரக்கு மற்றும் சேவை வரி | தற்போது வழங்கப்பட வேண்டிய தொகை (01.11.2024–31.03.2025) | 01.11.2024 முதல் 31.03.2025 வரை 5 மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | ரூ.7,96,068/– | ரூ.79,606.80 | ரூ.8,75,674.80<br>ரூ.8,75,675/– | (5615.56x5)<br>ரூ.28,077.80 | (8,75,675+ (GST–5615.56)<br>ரூ.8,81,290.56 | (8,81,290.56 X 5)<br>ரூ.44,06,452.80<br>Say<br>Rs.44,06,453/– |

ஏற்கனவே வழங்கி வரும் **மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ.7,96,068/–க்கு 10 சதவீதம் தொகை ரூ.79,607/–ஐ உயர்த்தி (01.11.2024 முதல் 31.03.2025 வரை – 5 மாதங்களுக்கு) மாதம் ரூ.8,75,675/– +GST ரூ.5615.56) வீதம் 5 மாதங்களுக்கு ஏற்படும் செலவினம் ரூ.44,06,453/–ஐ** வழங்கிட அனுமதி கோரி மாமன்ற பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. மேற்கண்ட நீர்ப்பணி நிலையங்களை 01.11.2024 முதல் 31.03.2025 வரை மேலும் 5 மாதங்களுக்கு இயக்கி பராமரிப்பதற்கு காலநீட்டிப்பு செய்து மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிடவும், ஏற்கனவே வழங்கி வரும் மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ.7,96,068/–க்கு 10 சதவீதம் தொகை ரூ.79,607/–ஐ உயர்த்தி மாதம் ரூ.8,75,675 + GST ரூ.5615.56/– வீதம் 5 மாதங்களுக்கு ஏற்படும் செலவின தொகை ரூ.44,06,453/– ஐ செலவு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.
3. இப்பணிக்கான செலவின தொகையினை 2024–25ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் குடிநீர் வழங்கு பணிகள் பராமரிப்பு செலவினங்கள் (2305009) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.2000.00 இலட்சத்தில் இருந்து செலவு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**இ4/8715/2022/மையம்**

**தீர்மானம் எண்:758 பொருள் : 78 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 79

